www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

# விடியல்

மே 1. 1986

கதிர் - 11

தமிழ் ஈழ விடுதலை இயக்க (TELO) அரசியல் ஏடு




## • இனப்பிரச்சனையில் இந்தியா இரட்டை வேடம்
## — ஜனாதிபதி ஜெயவர்த்தனா

## • தமிழ் கொரிலாக்களுக்கு இந்தியா உதவி
## — நிதி அமைச்சர் றொனிடிமெல்

# இந்தியாவிற்கு எதிரான ஆத்திரமூட்டல்கள் தொடர்கின்றன...

"இலங்கை இனப்பிரச்சனையை பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பதற்கு இந்தியா தொடர்ந்து உதவிவர வேண்டும்; இந்தியப் பிரதம மந்திரி ராஜீவ் காந்தி தொடர்ந்து பேச்சுவார்த்தைக்கு ஆதரவு அளிப்பார்; தமிழ் தீவிரவாதிகளை சமரச பேச்சு வார்த்தைகளில் ஈடுபடச் செய்யக்கூடிய ஒரே ஒரு நபர் ராஜீவ் காந்தி தான்" என அண்மைக் காலமாக ஜெயவர்த்தனாவும் அவரது அமைச்சர்களும் கூறிவரும் அதே வேளை, இந்தியாவை ஆத்திரமூட்டி அதனை வலியச் சண்டைக்கு இழுகச் செய்து இதன் மூலம் ஏகாதிபத்திய நாடுகளின் உதவிகளை மென்மேலும் பெற்றுக் கொள்ளும் ஜெயவர்த்தனாவின் நடவடிக்கைகளும் தீவிரமடைந்தே வருகின்றன.

கடந்த 18-4-1986ல் ஆஸ்திரேலியா ரேடியோ நிறுவனத்திற்காக ஜான்மில்ஸ் என்பவருக்கு பேட்டியளித்த ஜெயவர்த்தனா, தமிழ் தீவிரவாதிகளுக்கு இந்தியா உதவுகிறது. அதுதான் பெரிய பிரச்சனையாக உள்ளது" என்று கூறியதோடு எங்கள் சிறந்த நண்பன் பாகிஸ்தான் எனவும் குறிப்பிட்டார்.

தமிழ் தீவிரவாதிகளுக்கு இந்திய அரசு உதவுகிறது என்று நம்புகிறீர்களா என ரேடியோ நிருபர் கேட்டபோது, ஜெயவர்த்தனா "அது எனக்குத் தெரியாது; ஆனால் தமிழகம் அறிய தீவ்ரவாதிகளுக்கு துப்பாக்கிகள் வந்துகொண்டிருக்கின்றன" சீக்கிய தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் உதவுவதாக அவர்கள் கண்டிக்கிறார்கள்; தமிழ் தீவிரவாதிகளுக்கு இந்தியா உதவுவதாக நாங்கள் கூறுகிறோம்" என்றார்.

பிரச்சனையில் சமாதான உடன்பாடு காண இந்தியா உதவ முன்வருகிறது. ஆனால் பாகிஸ்தான் உங்களுக்கு ராணுவ உதவி அளிக்கிறது; இந்த இரண்டு நாடுகளில் யார் உங்களுக்கு சிறந்த நண்பன் என்று நிருபர் கேட்டதற்கு, "பாகிஸ்தான் தான் சிறந்த நண்பர்; தீவிர வாதிகளுக்கு உதவும் இந்தியா எங்களுக்கு உதவுவதாக கூறமுடியாது. இந்தியா இரட்டை வேடம் போடுகிறது" என்றார் ஜெயவர்த்தனா.

ராணுவ ரீதியில் இனப் பிரச்சனைக்கு தீர்வுகாண முடியும் என்று நம்புகிறீர்களா என நிருபர் கேட்டதற்கு "ராணுவ ரீதியில் பிரச்சனைக்கு ஒரு தீர்வு கண்டாகவேண்டும்" என ஜெயவர்த்தனா கூறியதோடு "பஞ்சாப்பில் ராணுவ ரீதியிலான தீர்வு பற்றி அருண் நேரு பேசுவதாகவும், ராஜீவ்காந்தியும் அதையே சொல்வதாகவும்" குறிப்பிட்டார்.

மற்றும் இலங்கையில் நடப்பது இனப் படுகொலையே என இந்திய வெளிவிவகார அமைச்சர் பகத் கூறியது பஞ்சாபை நினைத்துக் கொண்டு சொன்னதாக இருக்கும் எனவும் ஜெயவர்த்தனா பேட்டியில் போது குறிப்பிட்டார்.

இவை தவிர, கடந்த மாதம் வாசிங்டனில் பேசிய சிறிலங்கா நிதியமைச்சர் றொனிடிமெல் "ராஜீவ்காந்தி இலங்கை இனப்பிரச்சனைக்கு அமைதியான வழியில் தீர்வுகாண முயற்ச்சிக்கிறார் என்றாலும், தமிழ் கெரிலாக்களுக்கு தொடர்ந்து இந்தியா உதவியும், ஊக்கமும் அளித்து வருகிறது ராஜீவ்காந்தி நேரடியாக அவர்களுக்கு உதவாவிட்டாலும், தமிழ்நாட்டு மாநில அரசு பகிரங்க ஆதரவு அளித்து வருகிறது சீக்கிய தீவிரவாதிகளுக்கு வெளிநாடுகள்

4ம் பக்கம் பார்க்க....

**போராட்டம் எமது பாதை விடுதலை எமது இலக்கு சமாதானம் எமது வேட்கை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விடிவை நோக்கி...

சிறீலங்கா ஜனதிபதி ஜெயவர்த்தனவின் நாடகத்தின் மற்றுமோர் அங்கம் தற்போது மேடையேறியிருக்கிறது. அதாவது தேசிய அரசு அமைக்கும் பிரேரணையொன்றை தற்போது ஜெயவர்த்தன சமர்ப்பித்திருக்கிறார். இந்தப் பிரேரணை ஏற்கனவே திம்பு பேச்சு வார்த்தையிலும் ஏன் வட்டமேசை மாநாட்டிலும் நிராகரிக்கப்பட்டதுதான்.

1986ம் ஆண்டுக்கான சிறீலங்காவின் வரவு செலவு திட்டம் என்றுமில்லாதவாறு 1,200 கோடி, ரூபா துண்டுவிழுந்துள்ளதோடு-இராணுவ செலவீனம் 685 கோடி ரூபாயை எட்டியுள்ளது. இத்துடன், மத்திய கிழக்கு நாடுகள் இலங்கைத் தேயிலைக் கொள்வனவை வெகுவாக-குறைத்துள்ளன. இந்த நிலையில், பாற்றுக் குறையை வெளிநாட்டுக் கடனைக் கொண்டே சமாளிக்க வேண்டி ஏற்ப்பட்டுள்ளது.

இதற்காக நாடுநாடாக பிச்சைப் பாத்திரத்துடன் நிதியமைச்சர் றொனிடிமேல் வலம்வரும் இவ்வேளையில் தான் புதிய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதை விஞ்ஞான ரீதியாக புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் பெருகிவரும் பட்ட்ஜ பற்றுக்குறையை சர்வதேச செலாவணி நிலையம் வன்மையாக கண்டித்துள்ளது. அதிகரிக்கப்பட்ட இராணுவ செலவீனமே இதற்குக் காரணம் என அது சுட்டிக்காட்டியுள்ளது. ஆதலால் தொடர்ந்து கடனை வழங்க பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளது,

இதையடுத்து ''விலை வீழ்ச்சி காரணமாக இலங்கையின் ஏற்றுமதி சம்பாத்தியம் பெருமளவு குறைந்துள்ளது; இனப்பிரச்சனைக்கு அமைதியான முறையில் அரசியல் தீர்வுகாண அனைத்து முயகிற்சிகளும் தற்போது மேற்க்கொள்ளப்படுகின்றன. இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டதும் வரவு செலவுத் திட்டத்தின் பற்றுக்குறை குறையும். ஆதலால், இவ்வருடத்திற்கான பற்றுக் குறையை சமாளிக்க விசேஷ நிதியுதவியாக 15-கோடி டொலர் (USA) அளிக்க வேண்டுமென'' கெஞ்சாக் குறையாக கூறினார் றொனிடிமெல்.

சர்வதேச நிதி நிறுவனத்தையும்- உலக நாடுகளையும் ஏமாற்றி கடனைப் பெற்றுக் கொள்வதற்காகவே தற்போது புதிய பிரேரணைகளை முன்வைத்திருக்கிறது சிறீலங்கா அரசு இந்த ரிதியிலேயே தான் சென்ற ஆண்டு திம்பு மாநாடும்-அதற்கு முதல் ஆண்டு வட்டமேசை மாநாடு நடைபெற்றது மற்றபடி, இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டும் என்ற உண்மையான நல்லநோக்கம் ஜெயவர்த்தனவுக்கு இல்லை குட்டையை குழப்பி தன்னை ஸ்திரப்படுத்தவே ஆண்டுக்கு ஆண்டு போர்நிறுத்தங்கள்......பேச்சுவார்த்தைகள்......

கடந்தமாதம் ''வீக்எண்ட்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சிறில் ரணதுங்க ''விமானப்படையினரின் ஆதரவுடன் போராளிகள் மீது தரைப்படைகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படும்: இதற்கான உத்தரவு அனைத்து தரைப் படைகளுக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளது; இந்த சண்டையில் பொது மக்களுக்கு பெரும் சேதங்கள் ஏற்ப்படும்'' இதனைத் தவிர வேறு வழிகிடையாது" என்று குறிப்பிட்டார்.

"உடனடியாக கிராமத்தில் இருந்து வெளியேறிவிடுங்கள்! பெரிய அளவில் இராணுவம் தாக்குதல் நடாத்தவுள்ளது'' என்று கூறப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் ஹெலிக்கப்டர் மூலம் வீசப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



தோழர்கள்

- சைமன்
- செழியன்
- மணி
- ரஜனி
- கரிகாலன்
- மதன்லால்
- சோமு
- அருண்
- தயா

ஓராண்டு நினைவாக நாடெங்கும் ஒட்டப்பட்ட சுவரொட்டி.

## றெலோ (TELO) போராளிகளின்—— ——கடற் கண்ணி வெடியில் சிக்கி

## ● 40 கடற்படையினர் பலி.

## ● ரோந்துப் படகு முற்றாக சேதம்

கொலை வெறி பிடித்த ஜெயவர்த்தன அரசாங்கத்தை பாதுகாக்கின்ற ஆயுதப் படைகளுக்கு எதிராக தொடர்ச்சியான பலமான தாக்குதலை தொடுத்து வரும் றெலோ TELO போராளிகள் கடந்த 05-04-1986ல் தாக்கியதில் 40க்கும் மேற்ப்பட்ட ஆயுதப் படைகள் கொல்லப்பட்டன.

தமிழ் ஈழத்தின் கடல் பிராந்தியம் முழுவதையும் பாதுகாப்பு மண்டலமாக அறிவித்து, அப்பாவித் தமிழ் மீனவர்களை தினமும் கொன்றுகுவித்து வரும் கடற்படையினருக்கு எதிராகவே—றெலோ TELO போராளிகள் கடந்த 5-4-1986ல் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடலுக்கடியில் கண்ணிவெடி வைத்து, அதனில் கடற்படையினரின் ரோந்துப் படகு சிக்க வைக்கப்பட்டது.

கண்ணி வெடியில் சிக்கிய அந்த ரோந்துப் படகில் 40க்கும் மேற்பட்ட கடற்படையினர் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கண்ணி வெடியில் சிக்குண்ட அந்த 60 அடி நீளமான ரோந்துப் படகு முற்றாக சேதமடைந்ததோடு, அதில் பவனி வந்த 40க்கும் மேற்பட்ட கடற்படையினரும் கொல்லப்பட்டனர்.

5ம் பக்க தொடர்ச்சி....

பாக்கிப் பிரயோகம் மேற்க் கொண்டதில் 02 தமிழர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டனர்.

29-03-1986

திருகோணமலை மாவட்டம் கன்னியா என்ற இடத்தில் சிறீலங்கா இராணுவ ஹெலிக்கப்டர்கள் மேற்க்கொண்ட தாக்குதலில் 15 தமிழர்கள் படுகாயமடைந்தனர்.

வல்வெட்டித்துறை- தொண்டமானுறு- பருத்தித்துறை-காரைநகர் ஆகிய 04 இராணுவமுகாம்களை சுற்றியுள்ள பகுதிகளில் மக்களை வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனல் 03 நாட்கள் தொடர்ந்து ஹெலிக்கப்டர் தாக்குதல் மேற்க்கொள்ளப்பட்டது.

வசாவிளானில் காலை 10-45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு தமிழர்கள் மீது சிங்கள இனவெறி இராணுவம் சுட்டதில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானர். மற்றவர் தப்பியோடிவிட்டார்.

பருத்தித்துறை கடலில் படகின் மீது சென்றவர்கள் மீது சிறீலங்கா இராணுவ ஹெலிக்கப்டர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. எனினும் படகில் சென்றவர்கள் கடலில் குதித்து தப்பித்துக் கொண்டனர்.

காலை 03 தனியார் வாகனங்களில் முரசுமோட்டைக்கு வந்த இராணுவம் 3 இளைஞர்களை கைது செய்தது.

பிற்பகல் 1 மணியளவில் ஊர்காவற்துறை பகுதியில் ஹெலிக்கப்டர் தாளப் பறந்து றொக்கட் தாக்குதல் மேற்க்கொண்டது. இதனை தொடர்ந்து ஊர்காவற்றுறை கோட்டை இராணுவம் காரைநகர் குடிமக்கள் மீது பெருந்தாக்குதலை மேற்க் கொண்டது. 10 நிமிடம் நடை பெற்ற இத் தாக்குதலால் இரண்டு வீடுகள்-தீப்பிடித்து எரிந்தன. ●

இவைகளே ஜெயவர்த்தன அரசாங்கத்தின் உண்மை நிலையை புரிந்து கொள்ள போதுமானதாகும்.

எம்மைப் பொறுத்தவரை; திம்பு மாநாட்டில் ENLF சமர்ப்பித்த "தேசிய இன அங்கிகாரம் உள்ளிட்ட நான்கு அடிப்படைக் கோரிக்கைகள் தவிர வேறெந்த பிரேரணையும் பரிசலிக்க தகுதியற்றதாகும்'' ●

தொடர்புகட்கு —
சி. தயானந்தன்
35/3 வெல்கம் காலனி
சென்னை - 600101
தென்இந்தியா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- டியாகோகாசியாவில் அணு ஆயுதங்கள்
- பாகிஸ்தானில் அமெரிக்க யுத்த கப்பல்கள்
- பாகிஸ்தானுக்கு 4,800 கோடி இராணுவ உதவி
- சிறீலங்காவில் பாகிஸ்தான் யுத்த கப்பல்கள்
- சிறீலங்கா இராணுவ செலவு 585 கோடி

# இந்தியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

இந்துமகா சமுத்திர பிராந்திய நாடுகளை அடிபணிய வைத்து. தமது உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தவும் - அந்நாட்டு மக்களது உழைப்புச் சக்தியை கொள்ளையடிக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் செயல்படுத்தும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருவதையே தற்போது இந்துமகா சமுத்திர பிராந்தியத்தில் நடைபெறும் நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

அதுவும் நிலப்பரப்பில் பெரியதும் - மக்கள் தொகையை அதிகம் கொண்டதுமான இந்தியாவை அடிபணியவைக்க எடுக்கப்படும் முயற்சிக்களே இன்று முன்னணி வகிக்கிறது. டியாகோகாசியாவில் அணு ஆயுதங்கள் குவிக்கப்படுவதும் - பாகிஸ்தானுக்கு அமெரிக்க யுத்தக்கப்பலும்; சிறீலங்காவுக்கு பாகிஸ்தான் யுத்தக்கப்பல்களின் வருகையும் – பாகிஸ்தானுக்கான 4, 800 கோடி, ரூபா இராணுவ உதவியும்; சிறீலங்காவின் 585 கோடி ரூபா இராணுவ செலவுகளும் இவற்றையே எடுத்துக் காட்டுகின்றன.

## டியாகோகாசியாவில் அணுஆயுதங்கள்

இந்துமகா சமுத்திர பிராந்தியத்தின் இதய பாகத்தில் அமைந்துள்ள டியாகோகாசியா தீவில் உள்ள அமெரிகக இராணுவ தளத்தில் அமெரிக்காவின் நவீனகர ஆயுதங்கள் - போர்க்கப்பல்கள் - குண்டுவீச்சு விமானங்கள் ஏற்கனவே குவிக்கப்பட்டுள்ளதோடு; தற்போது அணு ஆயுதங்களை குவிக்கவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. டியாகோகாசியா தீவில் உள்ள இராணுவ தளத்தின் போர் விமானக் கண்காணிப்பு எல்லையானது இந்தியாவிலுள்ள விமானத் தளங்கள்- துறைமுகங்கள் - எண்ணை சுத்திகரிப்பு நிலையங்கள் தகவல் தொடர்பு அமைப்புககள் - ராணுவ கேந்திரங்கள் மற்றும் மின்சக்தி நிலையங்கள் போன்றவற்றின் பெரும் பகுதியை உள்ளடக்கியுள்ளது. இந்த நிலையில், அங்கு மேலும் அணு ஆயுதங்கள் குவிக்கப்படுவதாவது இந்திய பாதுகாப்பிற்கு மேலும் அச்சுறுத்தலாகும் என்பதில் ஐயமில்லை.

"அணு ஆயுதங்களைக் கொண்டு வந்து டியாகோகாசியாவில் குவித்து வைக்க வேண்டும் என்று அமெரிக்கா எடுத்துள்ள முடிவானது நமது எதிர் காலத்திற்கு மிகுந்த அபாயம் விளைவிப்பதாகும்". என இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் பகத் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் அமெரிக்கா யுத்தக் கப்பல்கள்

கடந்த மார்ச் மாதம் உலகின் மிகப் பெரிய விமானந் தாங்கிக் கப்பலான 'என்டர் பிரைசஸ்' உட்பட 6 அமெரிக்க யுத்தக் கப்பல்கள் பாகிஸ்தானுக்கு வருகை புரிந்தன. இந்த யுத்தக் கப்பல்களில் - அமெரிக்காவின் மின்னல் வேகத் தாக்கும் படைகளும் பாகிஸ்தான் வந்தன. இவர்கள் பாகிஸ்தானில் உள்ள இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை சுற்றி பார்வையிட்டதோடு; பாகிஸ்தான் இராணுவ தளபதிகளோடு பலதடவைகள் இரகசிய பேச்சு வார்த்தைகளை நடாத்தினர். இதனையடுத்து பாகிஸ்தானில் இராணுவ தளம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## 4, 800 கோடி. ரூபா இராணுவ உதவி

பாகிஸ்தானுக்கு அமெரிக்க யுத்தக் கப்பல்களின் வருகையையடுத்து; இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 4, 800 கோடி. ரூபா இராணுவ உதவி வழங்குவதற்கான ஒந்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதேவேளை, இந்த வருட ஆரம்பத்தில் 52 கோடி. ரூபா மதிப்புள்ள நவீனகரமின்னணு ஆயுதங்களை பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது ஒப்புக் கொள்ளப்பட்ட உதவித் தொகையும் நவீனகர கொலைக் கருவிகளாகவே கையளிக்கப்படும்.

## சிறீலங்காவில் பாகிஸ்தான் யுத்தக் கப்பல்கள்

பாகிஸ்தானில், அமெரிக்க யுத்தக் கப்பல்கள் தரித்து நின்ற வேளையில் தான், சிறீலங்காவுக்கு - ஆயுதங்களுடன் இரண்டு பாகிஸ்தான் யுத்தக் கப்பல்கள் சென்றன. மிக நவீனகர ஆயுதங்கள் இக்கப்பலில் இருந்து கடந்த மார்ச். 18ல் காரைநகர் கடற்படைத் தளத்தில் இறக்கப்பட்டன. அப்போது பீரங்கிப் படகுகளும் - விமானங்களும் ஹெலிக்கப்டர்களும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. இதுதவிர தற்போது தமிழ் ஈழப் பகுதியின் கடல் எல்லைப் பிராந்தியத்தில் 3 யுத்தக் கப்பல்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. ஆனல் இக்கப்பல்களில் எந்த நாட்டுத் தேசியக் கொடிகளும் பறக்கவில்லை.

## சிறீலங்கா இராணுவ செலவு 585 கோடி, ரூபா

இத்தகைய யுத்த தயாரிப்புகளுக்கு மத்தியில் தான் சிறீலங்காவிற்கான இவ்வருட இராணுவ செலவு 585 கோடி ரூபா ஆகும். 1978ல் இராணுவ செலவீனம் 58 கோடி ரூபா மாத்திரமே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது இது தற்போது 11 மடங்கால் அதிகரித்துள்ளது. இவ்வருட இராணுவ செலவீனம் வரவு செலவு திட்டத்தில் 485 கோடி. ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனல் கடந்த மாதம் மேலும் 100 கோடி. ரூபா ஒதுக்கப்பட்டது.

## யுத்த விமானங்கள் மறைந்தன,

இவற்றை தொடர்ந்தால் போல் கடந்த மார்ச் மாத 3வது வாரத்தில் 19 பேருடன் ஒரு இராணுவ விமானமும் - கடந்த 27. 03. 1986ல் மற்றோர் இராணுவ விமானம் 7 பேருடனும் காஷ்மீர் எல்லைப் பகுதியில் மாயமாய் மறைந்தன. இவ் இரண்டு விமானங்களையும் அண்மையில் தான் சோவியத் யூனியனிடம் (USSR) இருந்து இந்தியா வாங்கியது. பாகிஸ்தானின் நவீன ஏவுகணைகளுக்கு இந்த விமானங்கள் பலியாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இப்படியாக, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தற்போதைய செயல்கள் யாவும். இலங்கையை மையமாகக் கொண்டு திருகோணமலை - கராச்சி - டாக்கர் என்ற இராணுவ கேந்திர முக்கோணத்தையும்; கொழும்பு - இஸ்லாமாபாத் - டாக்டா என்ற அரசியல் முக்கோணத்தையும் அமைப்பதாகவே உள்ளது. இவற்றின் மூலம் இந்தியாவை அடிபணிய வைக்கலாம் என்பது அவர்களது எண்ணம்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்துமகா சமுத்திர பிராந்திய நாடுகளை அச்சுறுத்தும் வகையில் யுத்தத் தயாரிப்புக்களை தீவிரப்படுத்துவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. லத்தீன் அமெரிக்கா தொடக்கம் மத்திய அமெரிக்கா வரை பிலிப்பைன்ஸ் தொடக்கம் நிக்கரகுவா வரை ஈரான் தொடக்கம் லிபியா ஈறுக சென்ற இடமெல்லாம் மூக்குடைபட்ட நிலையில் தான் தற்போது இந்துமகா சமுத்திரப் பிராந்தியத்தில் அதுவும் இந்திய உபகண்டப் பகுதியில் தமது கால்களை ஆழமாகப் பதிக்கிறுர்கள். இவர்களது சந்தைகள் நாளுக்கு நாள் பறிபோவதே இதற்கு காரணமாகும்.

'சந்தைகளை பகிரங்கமாக ஆக்கிரமிக்கும் முயற்சிகள் தான் கடந்த மாதம் லிபியா மீது தொடுத்தபோரும் நிக்கரகுவாவுக்கு எதிரான யுத்தத்திற்கு 120 கோடி. ரூபா ஒதுக்கபபட்டதும் - நிக்கரகுவா எல்லையில் 50 அமெரிக்க இராணுவத்தினர் உட்பட ஒரு பட்டாலியன் ஹொண்டுரால் துருப்புக்களை குவிக்கப்பட்டதும், பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்ட யுத்தக் கப்பல்கள் பிலிப்பைன்ஸ் சுபிக் விரிகிடா கடற்பிராந்தியத்தில் தரித்துநின்றஅமெரிகக கடற்படையின் 7வது யுத்தக் கப்பல்கள் தான். பிலிப்பைன்சில் தற்போது மூக்குடைபட ஆரம்பித்த நிலையில் தான், இந்திய உபகண்ட பகுதியை நாடுகின்றன.

இதுதவிர, இந்துமகா சமுத்திர பிராந்தியத்தை அமைதி மண்டலமாக அறிவிக்க - வேண்டுமென 1971ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் செயல்ப்படுத்தப்படாமல் பல்வேறு காரணங்களை கூறி காலம் கடத்தி வந்ததில் அமெரிக்காவுக்கு பெரும் பங்கு உண்டு. காலம் தாழ்த்தும் அந்த இடைவெளிக் காலம் முழுவதும் தமது இராணுவ தளங்களை பலப்படுத்தும் முயற்சியிலேயே அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. கூட்டுச்சேரா இயக்கமும் - கடலோர நாடுகளும் இந்துமகா சமுத்திர பிராந்தியம் அமைதி மண்டலமாக்கப்படவேண்டும் எனக் கோரியும்; அதற்கான சர்வதேச மாநாட்டை நடாத்த வேண்டும் எனவும் எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் எவ்வித பயனும் இதுவரை ஏற்படவில்லை.

இப்படியாக, இந்துமகா சமுத்திச பிராந்தியத்தை யுத்த தளமாக மாற்றுவதில் சிறீலங்காவும், பாகிஸ்தானுமே முன்ன்னி வகிக்

மறுபக்கம் பார்க்க....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

3ம் பக்க தொடர்ச்சி....

கிறது. தமிழர் பிரச்சினையை சாட்டாக வைத்து சிறிலங்காவில் குவிக்கப்படும் ஆயுதங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானது மட்டுமல்ல; இந்தியாவுக்கும் எதிரானதுமாகும் என்பதை இந்தியா உணர்ந்து கொள்ள வேண்டும். திருகோணமலையில் மிகப்பெரிய இராணுவதளம் அமைக்கும் அமெரிக்காவின் முயற்சியை முறியடிக்க தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிப்பதோடு; தன்னாலியன்ற அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும். இலங்கையில் அமெரிக்க சதியை முறியடிக்க இது ஒன்றே வழியாகும்.

இதுதவிர, தமிழ் இனப்படுகொலைகளை தடுத்து நிறுத்த முயற்சி எடுத்துவரும் இந்தியா தமிழ் ஈழ விடுதலை மூலமே அது சாத்தியமாகும் என்பதை உணர்ந்து தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

தமிழ் ஈழ விடுதலையானது தமிழ் பேசும் மக்களது எதிர்காலத்தை சுபீட்சமாக்குவதோடு, இந்திய பாதுகாப்பிற்கும் புதிய அரணை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

6ம் பக்க தொடர்ச்சி....

இளவல் ஜெகன் ஆகியோர் உட்பட அனைத்து போராளிகளையும் மீட்பதற்காய் தலைவர் சிறீசபாரத்தினத்துடன் தோளோடு தோள் நின்று கடினமான பயிற்சியை துரிதமாக மேற்கொண்டான் எந்தப்பாரிய ஆயுதங்களையும் இலகுவாக இயக்குவதில் வல்லவராகவும் அனைத்து இராணுவ கலையிலும் நிலையில்லா இடத்தை பெற்றிருந்தார் தோழர் சுகி.

இத்தகைய இவனது இராணுவ ரீதியிலான செயல்பாடுள், வெலிக்கடை சிறையை தாக்குவதற்கான "புரட்சி யுத்தத்தில்" தலைமை ஏற்று தனது தோழர்களுடன் அணி நடக்கையிலே அந்த அரக்க இனம் எம் தலைவர்களை அழித்த செய்தி கேட்டு......

அந்த ஜூலை 25ல் இருந்து தனது பணிகளை தீவிரமாக்கி 24 மணிநேரமும், தமிழ் ஈழ விடுதலை இயக்க (TELO)த்தின் வளர்ச்சிக்காய் உழைத்தான், நமது இராணுவ படைகளுக்கு இரவு-பகலாக இடைவிடாது பயிற்சி அளித்தோடு, அமைப்பின் பணிகளை மக்கள் மத்தியிலும் மேற்கொண்டான்.

எமது பல கெரில்லாத் தாக்குதலில் பல படைப்பிரிவுகளுக்கு தலைமை தாங்கியதோடு; துரிதமான முறையில் செயல்பட்டு எதிரிப் படைகளை அதிரவைத்தான்.

எமது தோழர்களுக்கு கைக்குண்டு தயாரிக்கும் பயிற்சியை கற்றுக் கொடுக்கும் வேளையில்; இவன் தலையில் தாவிக் கொண்டதுவே அக்கைக்குண்டு.

இவனது இழப்பைக் கண்டு ஈழமக்கள் கண்கள் குளமாகின்றதே! எமது நெஞ்சம் பதறுகின்றதே!

நாம் மீண்டும் உயருகின்றோம்! இவன் மட்டுமல்ல இன்றுவரை இவனைப் போல் எத்தனை நல்லகரு விகளாய் விளங்கியோரை நாம் இழந்துவிட்டோம் அதனாலும் அஞ்சவில்லை; இவர்கள் இழப்பு எம் கொடிகளை மென்மேலும் சிவப்பாக்குகின்றது, இதனால் நாம் மென்மேலும் தீவிரமடைகிறோம்.

## ஒருபுறம் புதிய பிரேரணைகள்; —— மறுபுறம் இராணுவ விஸ்தரிப்புகள்.

சிறிலங்கா இராணுவத்தினர் காங்கேசன் துறை - தொண்டமானாறு - வல்வெட்டித் துறை- பருத்திததுறை இடங்களில் ஹெலிக் கப்டர் மூலம் துண்டுப் பிரசுரங்களை வீசினர். "உடனடியாக கிராமத்தில் இருந்து வெளியேறிவிடுங்கள்; பெரிய அளவில் ராணுவம் தாக்குதல் நடாத்தவுள்ளது" என்று எச்சரிக்கை ராணுவ தளபதியால் அத்துண்டுப் பிரசுரங்களில் விடுக்கப்பட்டிருந்தது.

இதே துண்டுப் பிரசுரங்கள் கடந்த 08. 04. 1,986ல் கிளிநொச்சிப் பகுதிகளிலும் வீசப்பட்டன.

பாலாலி இராணுவ முகாமிலிருந்து 1000ம் Km தூரத்திற்குள் இருக்கும்மக்களுக்கு இராணுவத்தினர் தினமும் தொந்தரவு கொடுத்து வெளியேற்றி வருகின்றனர். இதனல் கீரிமலை - வசாவிளான் – மயிலிட்டி கட்டுவன் பகுதிகளில் இருந்து பெருந்தொகையான மக்கள் தமது வீடுவாசல்களை விட்டு அகதிகளாக சுன்னாகத்திற்கு செல்கின்றனர்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிற்கு எதிராகவுள்ள வீதியை மறித்து ஆள் உயரத்திற்கும் மேலாக சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

அனைவரது கவனமும் திருகோணமலை கடற்படைத்தளத்தின் மீதே உள்ள இத்தருணத்தில், சிறிலங்கா அரசு காங்கேசன் துறை துறைமுகத்தை கடற்படைத் தளமாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. (சேது சமுத்திர திட்டத்தின் எதிரொலியா?)

பல நவீனகர ராணுவ ரோந்து வாகனங்களும் குண்டு துளைக்க முடியாத கவசவாகனம் அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வண்டிகள் யாழ்ப்பாணம் நோக்கி வரும் போது போராளிகள் தாக்குவார்கள் என்ற பயத்தினால் பொதுமக்கள் பிரயாணம் செய்த வாகனங்களை ராணுவத்தினர் தமது வண்டிகளின் இடையிடையே கலந்து வரவேண்டுமென கட்டளையிட்டு அதன்படியே செயல்பட்டனர்.

வவுனியா - ஒமந்தை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்கள் தற்போது விஸ்தரிக்கப்படுவதால், அப்பகுதி மக்கள் அவ்விடங்களைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

திருமலை மாவட்டத்திலுள்ள மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு - குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகிய பகுதிகளில் வெளியார் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

### இதுதான் ஏகாதிபத்திய இலட்சணம்

வளரும் நாடுகள் என்றழைக்கப்படும் 3ம் மண்டல நாடுகளில் 80 கோடிப் பேர் பட்டினியால் வாடுகிறார்கள் ஆனால் அமெரிக்காவிலோ பாலைக் கொண்டு போய் கடலில் கொட்டுகிறார்கள்.

உற்பத்திப் பொருட்கள் அதிகமானல் விலை குறைந்துவிடும். ஆதலால் உற்பத்தியாளர் பொருட்களை கடலில் கொட்டியோ அல்லது நெருப்பில் கொளுத்தியோ செயற்கை தட்டுப்பாட்டை உருவாக்கி விலையை ஏற்றுவார்கள் ஏகாதிபத்திய முதலைகள்.

இதன்படியே, அமெரிக்காவில் சில மாதங்களுக்கு முன் பால் உற்பத்தி அதிகமாகி விடவே பல்லாயிரம் லிட்டர் பாலைக் கொண்டு போய் கடலில் கொட்டினார்கள். ஆனல் தினமும் பாலைக் கொண்டு போய்க் கடலில் கொட்டி அலுத்துப் போய்விட்டதாம். ஆதலால், தற்போது பசுக்களை கொல்ல தீர்மானித்து விட்டார்களாம்.

அடுத்த 18 மாதங்களுக்குள் தினமும் 1, 200 பவுண்டு பால் பொருட்களை குறைக்க வேண்டும் என்பதற்காக 10 லட். பசுக்களை கொல்ல அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

## இலங்கையில் நடப்பது இனப் படுகொலைதான் — மேற்கு நாட்டுத் தூதர்.

இலங்கையில் நடப்பது இனப்படுகொலை தான் என்ற கருத்தை ஆதரித்து பத்திரிகைகளில் தமது பெயர் வெளியிடப்பட விரும்பாத கொழும்பில் உள்ள மேற்கு நாட்டின் தூதர் பேசியிருக்கிறார். இவர் பேசிய விபரம் "வாசிங்டன் டைமைஸ்" இதழில் கடந்த 01. 04. 1986ல் வெளியிடப்பட்டது.

அவர் கூறியிருப்பதாவது

அரசாங்கத்திற்கு எதிராக நான் பேச விரும்பவில்லை. ஆனல் மக்களை கொன்று மாய்க்கவும், மக்கள் மீது கண்மூடித்தனமாய் குண்டு வீசவும் அவர்கள் அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள், அத்தகைய ஒரு நிலைமையில், மக்கள் போராளிகள் மீது அனுதாபம் காட்டத் தலைப்படுகிறார்கள். இலங்கையில் நடப்பது இனப்படுகொலையா என்று நிருபர் கேட்டதற்கு அந்தத் தூதர் பதிலளிக்கையில், "ஒரு குறிப்பிட்ட இனத்தை கொன்றொழிக்கிறார்கள் என்பது தான் இனப்படுகொலை என்றால் இலங்கையிலே அதுதான் நடந்து வருகிறது இலங்கை இராணுவத்தினர் செய்யும் காரியங்களை வேறு என்ன பெயரிட்டு அழைக்க முடியும் என்று அவர் கேட்டார். இலங்கை அரசாங்கம் இந்தப் படுகொலையை தடுக்க முயற்சிக்கிறதா? என்பது தான் கேள்வி. குற்றம் செய்பவர்கள தண்டிக்கப் படத்தான் வேண்டும். ஆனல் துருப்புக்கள் மக்களை கூட்டம் கூட்டமாய் கொன்றிருக்கிறார்கள். படுகொலையை நிறுத்தும்படி இலங்கைத் துருப்புக்களை கடுமையாக கண்டித்து நடவடிக்கை எடுத்தால் அவர்கள் அரசுக்கு எதிராக கிளம்பி விடுவார்கள் என்று இறங்கை அரசு பயப்படுகிறது மேற்கு நாடுகளின் ராஜதந்திரிகளும் — சிங்கள அரசு அதிகாரிகளும் — எதிர்கட்சித் தலைவர்களும் இப்படித்தான் கருதுகிறார்கள் — என்றும் அப் பத்திரிகை எழுதியுள்ளது.

1ம் பக்க தொடர்ச்சி....

ஆதரவு வழங்குவதாக இந்தியா குற்றம் சாட்டுகிறது ஆனல் தமிழ் கெரில்லாத் தலைவர்கள் அனைவரும் இந்தியாவில் தான் வாழ்கிறார்கள்" என்று பேசினர்.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக தேசிய அரசு அமைக்கும் திட்டத்தை இந்தியாவிடம் சமர்ப்பித்துள்ளோம்; தமிழ் பயங்கரவாதிகள் தான் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் இடையூறாக உள்ளனர் என கூறி வரும் ஜெயவர்த்தன தான் மேற்கண்ட பேட்டியை அளித்துள்ளார். ஜெயவர்த்தனவின் இந்த உண்மை நிலையை அனைத்து மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளபடி, உலக நாடுகளின் உதவியைப் பெற்று தமது இராணுவத்தை அமைப்பு ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் பலப்படுத்தவே ஜெயவர்த்தன புதிய சமரச திட்டத்தை தூக்கிப் பிடித்திருக்கிறார்.

இது தவிர, ஜெயவர்த்தன தனது நிலையில் இருந்து இம்மியளவும்பின்வாங்கவில்லை.

இதனை இந்திய அரசு உணர்ந்து கொள்ள வேண்டும் ஐ. நா. சபையில் இலங்கைத் தமிழர்களின் அவல நிலையை இந்தியா ஒலிக்கச் செய்தது போன்று தனது செயல்பாடுகளை மேலும் தீவிரமாக்கி தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

www.tamilarangam.net



# தொடரும் இராணுவ வெறியாட்டங்கள்...





21 03. 1986

காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை காரைநகர் கடற்படை முகாமிலிருந்து பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலை தொடர்ந்து ஹெலிக்கப்டர் மூலமும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயப் பகுதி மக்கள் மீது ஜெயவர்த்தன இராணுவம் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் 4 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

22. 03. 1986

ஆனையிறவு உப்பளம் பகுதியில் கடலோர மீனவர்கள் பலர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

23. 03. 1986

கிளிநொச்சியை சேர்ந்த 6 மீனவர்கள் தாண்டிக் குடாவிலிருந்து 3 மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சியை நோக்கி சென்று கொண்டிருந்த போது முறிகண்டியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து காலை பீரங்கி வேட்டுக்கள்-மோட்டார் செல்கள் பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது ஏவிவிடப்பட்டன. இதனால் தொண்டமானாறு முகாமுக்கு வடகிழக்கில் இரண்டு மாடி வீடுகள் முற்றாக சேதமடைந்தன

24. 03. 1986

அதிகாலை 5 மணிக்கு மட்டக்களப்பிலிருந்து அம்பாறையை நோக்கிச் சென்ற போக்குவரத்து பஸ்வண்டி ஜெயவர்த்தன குண்டர்களால் காத்தான்குடியில் வழிமறிக்கப்பட்டு, அதில் பிரயாணம் செய்த தமிழர்களின் உடைமைகள் அனைத்தும் சூறையாடப்பட்டன.

அதிகாலை 3 மணியளவில் மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து ஆயுதப்படையினர் கவசவாகனங்களில் ரோந்து சென்ற சமயம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரண்டு தமிழர்கள் படுகாயமடைந்தனர்.

தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து 'தோட்டார் செல்' தாக்குதல் மேற்க் கொள்ளப்பட்டது. இத் தாக்குதலை தொடர்ந்து கடற்படைக் கப்பலிலிருந்தும், பீரங்கிப் படகுகளில் இருந்தும் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனால் கரையோர வீடுகள் பல சேதமாக்கப்பட்டன.

25 03. 1986

வவுனியா பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பெண்மணி உட்பட 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட பெண்மணி வவுனியா ஸ்ரீமுருகன் தியேட்டர் உரிமையாளரின் மனைவியாகும்.

தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து மாலை வெளியே வந்த சீருடையினர் "தம்பாளை" என்ற இடத்தில் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு வயோதிபர்கள் படுகாயமடைந்தனர். இது தவிர பலவீடுகளில் பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. மீண்டும் முகாமிற்கு திரும்பிய இராணுவத்தினர் அங்கிருந்தும் 5 தடவைகள் "Motor Cell" தாக்குதலை மேற்கொண்டனர்.

சாம்பல்தீவு, ஆத்திமோட்டை பகுதிகளில் இராணுவத்தினர் நடாத்திய தேடுதல் வேட்டையின் போது பெண்கள் உட்பட 25 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

வவுனியாவில் உள்ள இறம்பைக்குளம் என்ற இடத்திற்கு கறுப்பு சீருடையில் வந்த 08 இராணுவத்தினர் ஒரு பெண்மணியை வெட்டிக் கொன்றதுடன், ஒரு வீட்டையும் கொள்ளையடித்தனர்.

26-03-1986

பலாலி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட ஹெலிக்கப்டர் அரைமணி வசாவிளன்-குரும்பசிட்டி பகுதிகளில் அரை நேரம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்க் கொண்டது. இதன் பின்னர் முகாமிற்கு திரும்பிய ஹெலிக்கப்டர் மீண்டும் இரண்டாவது தடவையாக புறப்பட்டு இதேபகுதிகளில் ஒருமணிநேரம் தாக்குதல் நடத்தியது இச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதோடு, பலர் படுகாயமடைந்தனர். பலவீடுகள் சேதமாக்கப்பட்டன.

மன்னார் இராணுவ முகாமிலிருந்து "MOTOR CELL" தாக்குதல் மேற்க் கொள்ளப்பட்டது. இதனால் இரண்டு தமிழர்கள் காயமடைந்தனர்.

காலை ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயத்திற்கு திடீரென ஜீப் வண்டிகளில் வந்த இராணுவத்தினர் பாடசாலையில் பரீட்சை எழுத்திக் கொண்டிருந்த மாணவர்கள் மீது காடைத்தனத்தை மேற்க் கொண்டனர். இதனால் பரீட்சை குழப்பப்பட்டதோடு, பல மாணவர்கள் காயமடைந்தனர்.

27-03-1986

கிளிநொச்சியிலுள்ள கனகபுரம்-திருநகர்-ஜெயந்திநகர்-எட்டாம் வாய்க்கால் ஆகிய-பகுதிகளில் சாரம்-சேட் அணிந்து சாதாரண விவசாயிகளைப் போல நடமாடிய சிங்கள இனவெறி இராணுவத்தினர், அங்கிருந்து பொது மக்கள் சிலருடைய சைக்கள் வண்டிகளை அபகரித்து சென்றதோடு-எட்டாம் வாயக்கால் பகுதியில் 10 ஏக்கர் நிலத்தில் அறுவடை செய்யப்பட்டு, சூடடிப்பதற்காக குவித்து வைக்கப்பட்டிருந்த 3 பெரிய நெற்குவியல்களை தீவைத்து கொளுத்தினர்.

காரைநகர் துறைமுகத்திலிருந்து பிரயாணிகளுடன் ஊர்காவற்றுறையை நோக்கி வந்து கொண்டிருந்த படகை, சிங்கள கடற்படையினர் வழிமறித்து தாக்கியதில் பலர் காயமடைந்தனர்.

பரந்தன் பகுதியில் லொறி ஒன்றில் சாதாரண உடையில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மேற்க்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு தமிழர் கொல்லப்பட்டார்.

பலாலிப் பகுதியில் ஹெலிக்கப்டர் நடாத்திய குண்டு வீச்சில் வானில் பிரயாணம் செய்த மூன்று தமிழர்கள் காயமடைந்தனர்.

முல்லைத்தீவு கள்ளப்பாடு என்ற இடத்திலுள்ள வீடுகளில் இராணுவத்தினர் சோதனை நடாத்திய போது நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்களை தமது பாதுகாப்பிற்காக பயணம் வைத்து இருந்தனர்.

பருத்தித்துறையில் இளைப்பாறிய சுகாதாரத் திணைக்கழக காவலாளி ஒருவர் இராணுவத் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி ஸ்தலத்திலேயே பலியானர்.

28-03-1986

பெரிய வெள்ளி திருநாள் பூசைக்காக யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்திலிருந்து பருத்தித்துறை சென் தோமஸ் ஆலயத்திற்கு சென்ற வண. தந்தை-சகாயராசா என்பவர், இராணுவத் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி ஸ்தலத்திலேயே பலியானர்.

காலை 11 மணியளவில் பரந்தன் முரசுமோட்டை பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரால் சகல போக்குவரத்து வாகனங்களும் 2 மணித்தியாலங்களுக்கு மேலாக தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டு, பலத்த சோதனைக்குள்ளாக்கப்பட்டது. இச்சம்பவத்தின் போது சரமாரியாக துப்பாக்கிவேட்டுக்கள் தீர்க்கப்பட்டதுடன், பல நெற்குவியல்களும் தீக்கிரையாக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில் பிரயானம் செய்த இரண்டு சகோதரர்கள் சிறீலங்கா இராணுவத்தினரால் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

வவுனியா சிவன்கோவில் பகுதி சிங்கள இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. அப்போது 3 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். தொடர்ந்தும் மக்கள் தாக்கப்பட்டதோடு, பலர் கைது செய்யப்பட்டனர். சிங்கள இனவெறி இராணுவத்தின் ஹெலிகப்டர் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

காலை அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவை சுற்றிவளைத்து சோதனை நடாத்திய சிறீலங்கா இராணுவத்தினர் 300 பேரை கைது செய்தனர். இதுதவிர, ஆரயம்பதி பகுதிகளிலும் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

பிற்பகல் வசாவிளான் பகுதியில் பிரயாணம் செய்து கொண்டிருந்த இரு வான்கள் மீது ஹெலிகப்டர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரண்டு தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

திருகோணமலையில் உள்ள இலுப்பைக் குளத்தில் தமிழ் மக்கள் மீது விமானக்குண்டு வீச்சும்-ஹெலிக்கப்டர் தாக்குதலும் மேற்க் கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வந்தாறுமூலைக் கிராமத்தில் சைக்கிளில் பவனி வந்த எட்டு-சிறீலங்கா இராணுவ கொமாண்டோக்கள் முன்னால் வந்த ரைக்டர் மீது துப்

8ம் பக்கம் பார்க்க.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆமதாபாத்தில் ரெலோ (TELO) புகைப்படக் கண்காட்சி



## பிரச்சாரக் கூட்டம்.



# முன்னணிப் போராளி

# தோழர் சுகிக்கு வீரவணக்கம்



யாழ் நகரை பிறப்பிடமாகக் கொண்ட இவன், எமது அமைப்பின் ஆரம்பகால உறுப்பினர் எமது இயக்கத்தை கட்டி வளர்த்ததில் பெரும் பங்கு இவனுக்கு உண்டு. எமது அமைப்பின் செயல்ப்பாடுகளில் உணர்வு பூர்வமாக செயலாற்றி தோழர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் நல்ல அபிப்பிராயத்தை பெற்றிருந்தவன்.

இனவெறிபிடித்த சிறீலங்கா ஆட்சியாளர்களின் பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிரான பல அகிம்சைப் போராட்டங்களில் சிறுவயதிலிருந்தே பங்கேற்றவன். அகிம்சைப் போராட்டங்களால் சிறீலங்கா ஆட்சியாளர்களை பணியவைக்க முடியாது ஆயுதப் போராட்டமே அதற்கு ஒரேவழி என்பதை அனுபவரீதியாக உணர்ந்து கொண்ட தோழர் சுகி அதற்காய் தமிழ் ஈழ விடுதலை இயக்க (TELO)த்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

ஒடுக்குகின்ற சிறீலங்கா பாசிஸ ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்திய ஒரே காரணத்துக்காக வெலிக்கடையில் வதைபட்ட எமது அமைப்பின் முன்னோடிகளான தேசபிதா தங்கத்துரை-தளபதி குட்டிமணி-

4ம் பக்கம் பார்க்க....

## ஆக்கிரமிப்பாளர்களை அடித்து விரட்டிடுவோம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்